# குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் பரிணாமம்

குழந்தைகள் அறிவியல் மாநாடு மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்ப துறையின் திட்டமாக 1993ல் துவங்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பூகோள, மொழி மற்றும் கலாச்சார பகுதிகளைச் சேர்ந்த 10 வயது முதல் 17 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லும் மற்றும் செல்லாத குழந்தைகளையும், மாற்றுத் திறனாளியாக உள்ள குழந்தைகளையும் உள்ளடக்கிய திட்டமாக இது விளங்குகிறது.

“நிலைப்புரு வாழ்க்கைக்கான அறிவியல்” என்னும் இந்த ஆண்டிற்கான (2020-2021) கருப்பொருள் 2018ம் ஆண்டிலேயே முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு (2019) டிசம்பரில் கேரளாவில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டிற்கு பிறகு 2020 ல் தேசிய அளவிலான இந்த நிகழ்வை எப்படி தொடரப் போகிறோம் என்கிற தெளிவின்றி மத்திய அமைப்பு இருந்த சூழலில், திடீரெனத் தோன்றிய கொரோனா பெருந்தொற்று நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. இதுவரை இந்த உலகம் கண்டிராத ஒரு மாறுபட்ட சூழலை சந்தித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள கருப்பொருளானது, குழந்தைகள் அத்தியாவசியமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான ஒன்றாக அமைந்துள்ளது.

குழந்தைகள் அறிவியல் மாநாடு கடந்த 27 ஆண்டுகளில், சுற்றுச் சூழல், ஊட்டச்சத்து, தூய்மை இந்தியா, நீர் ஆதாரம், பல்லுயிர் பெருக்கம், நிலவளம், ஆற்றல், வானிலை மற்றும் பருவ காலம் போன்ற கருப்பொருளில் லட்சக்கணக்கான குழந்தை விஞ்ஞானிகளை ஆய்வில் ஈடுபடுத்தி, புதுமையான, புத்தாக்கச் சிந்தனைகளை வளர்த்து, உள்ளூர் அளவிலான பல அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்து பல புதுமையான கண்டறிதல்களை சாதித்துள்ளது. தற்போதைய புதிய கருப்பொருள் குழந்தைகளுக்கும், வழிகாட்டி ஆசிரியர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் புதிய சூழலுக்கு ஏற்றார்போல் செயல்பாடுகளை வகுத்துக் கொண்டு பெருந்தொற்றை கட்டுப்படுத்தி மந்தை நோய் எதிர்ப்பு சக்தியை பெற்று, விரைந்து நாம் பழைய நிலையில் செயல்பட சவால் நிறைந்த வாய்ப்புக்களை அளித்துள்ளது.

2020-21ம் ஆண்டுகளில் பயன்படுத்துவதற்கென ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தேசிய அறிவியல் மாநாட்டுக்கான செயல்பாட்டு வழிகாட்டி கையேடானது 2019 ஆகஸ்டு 8-10 தேதிகளில் கேரளா வன ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பணிப்பட்டறையில் விவாதித்து தயாரிக்கப்பட்டு, 2019 டிசம்பர் 7-9ல் தேஷ்பூர் பல்கலைக்கழகத்தில், உள்ளடக்கத்தை இறுதி செய்யும் பணிப்பட்டறையில் இறுதிப்படுத்தப்பட்டது. நிலைப்புரு வளர்ச்சியின் லட்சினையுடன் தொடர்புடைய கருப்பொருள் மற்றும் துணைக் கருப்பொருளை கொண்டுள்ள இந்தத் திட்டத்தை முன்னோடி தேசிய திட்டமாக மத்திய அரசு அங்கீகரித்துள்ளது இதன் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துகிறது.

செயலர்
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
நெ. 14, பெல்லியப்பா கட்டிடம்,
அண்ணா சாலை, வேலூர் - 632 001.

தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடானது குழந்தைகள் நுண்ணிய, குறு ஆய்வு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒரு தளமாகும். இதற்கான விதை 1993ல் மத்திய பிரதேச மாநில குவாலியர் அறிவியல் மையம் என்னும் அரசு சாரா தொண்டு நிறுவனத்தால் ஊன்றப்பட்டது. பின்னர் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் தொழில்நுட்பத் தகவல் பரிமாற்ற அமைப்பால் தத்தெடுத்து தேசிய அளவில் விரிவடையச் செய்தது. துவக்கத்தில் அறிவியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வந்தன. அனுபவம் மிக்க கல்வியாளர்களைக் கொண்டு என்.சி.எஸ்,டி,சி யால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் குழுவின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளோடு 2014ம் ஆண்டு முதல் அறிவியல் தொழில் நுட்பத்துறையின் என்.சி.எஸ்.டி.சி இந்த மாநாடுகளை ஒருங்கிணைத்து வருகிறது.

1987ல் ''பாரத் ஜன விஞ்ஞான் ஜாத்தா'' என்ற இயக்கத்தின் மூலமும், 1992ல் ''பாரத் ஜன ஞான விஞ்ஞான் ஜாத்தா'' அமைப்பின் கீழும் ஏராளமானவர்கள் அறிவியல் பிரச்சாரத்தை இந்தியா முழுவதும் செய்து வந்த காலம் அது. மக்களிடம் அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பெரும் நிகழ்வுகள் இடைவிடாது தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 1993ம் ஆண்டில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு தேசிய அளவிலான நிகழ்வாக தொடங்கப்பட்டது. இது சமூகத்திற்கு பெரிதும் பயன்படும் வகையில் குழந்தைகளிடமும், அவர்களோடு ஆசிரியர்களிடமும் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்கும், அறிவியல் ஆர்வத்தைத் தூண்டவும், அறிவியல் வழிமுறைகளை புரிந்துகொள்ளச் செய்யவும் பெரும் எதிர்பார்ப்போடு துவங்கப்பட்டது. அன்று முதல் குழந்தைகள் அறிவியல் மாநாடுகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான (2020-2021) செயல்பாட்டு வழிகாட்டி கையேடு **“நிலைப்புரு வாழ்க்கைக்கான அறிவியல்”** என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. அதில் துணை கருப்பொருள்களாக

1. **நிலைப்புரு வாழ்க்கைக்கான சுற்றுச் சூழல்,**
2. **நிலைப்புரு வாழ்க்கைக்கான பொருத்தமான தொழில் நுட்பம்,**
3. **நிலைப்புரு வாழ்க்கைக்கான புதுமையான சமூகக் கண்டுபிடிப்புக்கள்,**
4. **நிலைப்புரு வாழ்க்கைக்கான வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் மாதிரிகள்,**
5. **நிலைப்புரு வாழ்விற்கான பாரம்பரிய அறிவு,**
6. **சிறப்பு கருப்பொருள்: கோவிட் 19**

முதலியன இடம் பெற்றுள்ளது. கோவிட் 19 (கொரோனா) பெருந்தொற்றை கடந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் அதன், தோற்றம், வளர்ச்சி, பரவல், தொற்று, நோய், கட்டுப்படுத்தும் வழிமுறைகள், தடுக்கும் வாய்ப்புக்கள்,

தற்காத்துக்கொள்ளும் முறைகள் குறித்து புதுமையான கண்டுபிடிப்புக்களை குழந்தைகள் மேற்கொள்வார்களேயானால் அது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும், சமூகத்தின் நலனுக்கும் பெரிதும் உதவ்வதாக இருக்கும்.

இந்த ஆண்டிற்கான மாநில அளவிலான கருத்தாளர் புத்தெழுச்சி முகாம், மண்டல, மாவட்ட வழிகாட்டி ஆசிரியர் பயிற்சிகள் முதலியன நிறைவு பெற்றுள்ளது. வழிகாட்டி ஆசிரியர் மற்றும் குழந்தைகள் பதிவு நடைபெற்று வருகிறது. ஆய்வுகளின் இடைக்கால பரிசீலணை 2020 டிசம்பர் 20 முதல் 25 வரை நடைபெற உள்ளது. 2021 ஜனவரி 5ம் தேதிக்குள் மாவட்ட மாநாடுகளை முடித்து மாநில மாநாட்டினை ஜனவரி 15க்குள் முடிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இடையில் தேர்வாளர்களுக்கும் மதிப்பீட்டு வழிமுறைகள் குறித்த ஒரு பணிப்பட்டறை ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநாடுகள் அனைத்தும் இணய வழியிலேயே நடைபெறும். மொத்த பதிவுகளைப் பொருத்து மாநில மாநாட்டில் பங்கேற்கும் மாவட்ட எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும். ஆய்வில் பங்கேற்கும் அனைத்து குழந்தைகளுக்கும் சான்றிதழ் மற்றும் ஊக்கப் பரிசுகள் ஆங்காங்கே வழங்கப்படும். கருத்தாளர்கள், வழிகாட்டி ஆசிரியர்கள், தேர்வாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆய்வின்போதும் மாநாட்டின் போதும் வழிகாட்டி ஆசிரியர்களும், குழந்தை விஞ்ஞானிகளும் அரசு அறிவித்துள்ள சமூக இடைவெளி, தனிநபர் இடைவெளி, முகக்கவசம், சானிடைசர், கை கழுவுதல் போன்றவற்றை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

T. mi...
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
நெ. 14, பெ... கட்டிடம்
அண்ணா சாலை, வேலூர் - 632 001